வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 22.04.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 137 | பக்கங்கள் : 16





# எதிரணிகள் ஒன்றிணைந்து கொழும்பில் சத்தியாகிரகம்!

## சந்திரிகா, ரணில், சஜித், சம்பிக்க பங்கேற்பு!

கொழும்பு, ஏப்ரல் 22

அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாத சட்டத்தை ஒழித்தல், குடிமக்களின் கருத்துக்களை முன்வைக்கவும் பங்களிக்கவும் மக்கள் மன்றத்தை நிறுவுதல் எனப் பல்வேறு கோஷங்களை முன்வைத்து நேற்று கொழும்பில் எதிரணிகள் ஒன்றிணைந்து நேற்று சத்தியாகிரக போராட்டத்தை நடத்தினர். 15

# ஆளும் கட்சியில் இருந்து வெளியேறவுள்ள 13 பேர்?

## பெரும்பான்மையை இழக்கும் அரசு

கொழும்பு, ஏப். 22

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் அரசாங்கத்திற்கான வழங்கிவரும் ஆதரவை மீளப்பெற்று சுயாதீனமாக செயற்படவுள்ளதாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். 15

# முகக்கவசம் மீண்டும் கட்டாயம்!

கொழும்பு, ஏப். 22

பொது இடங்களில் முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்கவேண்டாம் என்ற தீர்மானத்தை இடைநிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் போராட்டங்களில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டுள்ளமையை கருத்திற் 15

# 1040 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகளை வழங்குகிறது சீனா

## பீரிஸுடனான சந்திப்பில் அந்நாட்டு தூதர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 22

இலங்கைக்கு 5000 மெற்றிக் தொன் அரிசி, 1040 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை மனிதாபிமான உதவியாக வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸை சீனத் தூதுவர் கியூ சென் ஹொங் நேற்று சந்தித்துப் பேசிய 15

### ஈஸ்டர் தாக்குதல் நினைவுநாள்:

# நாடுமுழுவதும் நினைவேந்தல் நீதி வேண்டிப் போராட்டங்கள்!

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடைபெற்று மூன்றாம் ஆண்டு நிறைவு நாளான நேற்று நாடு முழுவதும் தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள், வழிபாடுகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து தாக்குதலுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. 15




# ஈஸ்டர் தாக்குதலின் உண்மையை மறைக்கிறார் அதிகாரமுடையவர்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 22

ஈஸ்டர் தாக்குதலின் உண்மை வெளியிடப்படாமல் இருக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பவர் நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத் திக்கொண்ட சிறப்பு அதிகாரம் படைத்தவர் என்ற சந் தேகம் எழுந்துள்ளது என 15

# பிரதமர் மஹிந்த தலைமையில் ஆட்சியை வலுவாக்கத் திட்டம்!

## ஆளும்கட்சி கூட்டத்தில் நிறைவேறியது தீர்மானம்

கொழும்பு, ஏப்ரல் 22

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆட்சியை வலுவாக வைத்திருப்பதற்கான தீர்மானம் நேற்று பிற்பகல் ஆளும் கட்சி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 15

# உயர்தர பரீட்சை ஒக்ரோபரில்!

கொழும்பு, ஏப். 22

2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 17ஆம் திகதி முதல் நவம்பர் 12ஆம் திகதி வரை நடைபெறும் என்று கல்வி அமைச்சர் தெரி 15

# துப்பாக்கிச் சூடு நடத்தும் உத்தரவு வழங்கியவர்கள் 3 அமைச்சர்களே!

## நளின் பண்டார எம்.பி. பரபரப்பு தகவல்

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக நடவடிக்கையில் 3 ஆயுதங்களின் ஊடாக 90 ரவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

காலி, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள அமைச்சர்களே போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறு 15

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்க அர்ப்பணிப்பாக உள்ளேன்!

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி

கொழும்பு, ஏப். 22

"உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கு நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன். விரைவில் நீங்கள் எதிர்பார்த்த நீதி கிடைக்கும் என்று நான் பிரகடனப்படுத்துகிறேன்" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று மூன்றாண்டுகள் நிறைவடைந்த நிலையில், அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற் 15

## இப்படியும் நடக்கிறது...!

காலிமுகத்திடலில் “கோட்டா கோ ஹோம்” போராட்டம் திட்டமிட்டவாறு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதே, அது வவுனியாவில் ஏ - ஒன்பது வீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்போல தொடர்ந்து நடக்கும் என்பதை இந்தப் பத்தியில் கோடிகாட்டியிருந்தோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம் இரண்டாயிரம் நாட்களை எட்டப்போகின்றது. அங்கே போராட்டக்காரர்கள் தமக்குள் நேரஅட்டவணை தயாரித்து மாறி மாறி இருந்து போராட்டத்தை நடத்துகின்றனர். அவர்களின் கோரிக்கையை அரச தரப்பு மாத்திரமல்ல, தமிழ் அரசியல் தரப்பினரும் கண்டுகொள்வதில்லை.

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு நவீன கார்களில் வந்து இறங்கி சில மணி நேரம் போராட்டத்தில் கலந்துகொண்டு விட்டு செல்வோரும், காலிமுகத்திடலில் வழக்கம்போல மாலை நேரங்களில் கூடிக்குலாவுவதுபோல இப்போதும் அங்கே குதூகலம் தொடர்கின்றது.

அங்கிருப்பவர்களின் ஒரே கோரிக்கை “கோட்டா கோ ஹோம்” தான். அது தொடரும் என்பதும் தெரிந்ததுதான்.

ஆனால், காலிமுகத்திடலுக்கு வெளியே நாடு முழுவதும் நடக்கும் போராட்டங்கள், உண்மையான பாதிக்கப்பட்டவர்களின் குமுறல். அவர்கள் விலைவாசி உயர்வைத் தாங்க முடியாமல் வீதிக்கு வருபவர்கள். தமது கோபத்தை எப்படிக் காட்டுவது என்று தெரியாமல், தத்தமக்கு தெரிந்த “பாஷை” யில் எதிர்ப்பைக் காட்டுகிறார்கள்.

அதனால்தான் வீதியில் ரயர்களைப் போட்டுக் கொழுத்துகின்றார்கள். ஏன் சில வேளைகளில் வாகனங்களையும் தாக்குகிறார்கள்.

அவர்களின் கோபத்தை அடக்க, இந்த அரசு போய், நாளை இடைக்கால அரசு வந்தாலும், எரிபொருள் விலை கூடலாம். அப்படி அது கூடினால், அப்போதும் அவர்கள் வீதிக்கு வரத்தான் செய்வார்கள்.

அது ஒரு மரண வீடு. யாழ்ப்பாண நரத்தின் புறநகர் ஒன்றில் நடந்த அந்த மரணவீட்டுக்கு இந்த ஊர்க்குருவியும் சென்றிருந்தது. நண்பர் ஒருவரின் தந்தை மரணமடைந்திருந்தார்.

வேறு எந்த வைபவங்களுக்கு போனாலும், இப்படி ஆற அமர இருந்து உலக நடப்புக்களைக் கதைக்கமுடியாது. மரண வீடுகளில் மாத்திரமே கூடியிருந்து ஒவ்வொருவரும் கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த ஊர்க்குருவி போய், ஒரு கதிரையில் அமர்ந்திருந்தபோது, அருகே நான்கு பேர் இருந்து ஊர்வம்பு அளந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் பேச்சு நாட்டில் நடக்கும் சம்பவங்களை பற்றிய திசை மாறியபோது, நான் காதை கொடுத்துவிட்டு அமர்ந்திருந்தேன்.

யாழ்ப்பாணத்தில் இந்த அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடக்கவில்லையே அது ஏன் என்று ஒருவர் கேட்க, மற்றவர் சொன்னார், இந்த விலையேற்றம் எல்லாம் ஏதோ இந்த அரசாங்கத்தால்தான் வந்தது என்பதுபோல சிங்கள மக்கள் நம்புகின்றார்கள் - போராட்டம் செய்கிறார்கள். ஆனால், அது நமக்கு மாத்திரமல்ல, லண்டனில் பெற்றோல் விலை இரண்டு மடங்காகிவிட்டது. ஜேர்மனியிலும் அதேநிலைதான், இதுபற்றிய தகவல்களை நம்மவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து இங்குள்ள உறவுகளுக்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் இவர்கள் இவற்றுக்கு காரணம் அரசு மாத்திரமல்ல என்பதை அறிந்ததால்தான் போராடவில்லை - என்றார்.

விலையேற்றம் எல்லாம் உலகம் முழுக்கத்தான் நடக்கின்றது. ஆனால், நமது நாட்டில்தான் அரசிலுள்ளவர்கள் கொள்ளையடிக்கிறார்கள் என்றார் மற்றும் ஒருவர்.

உடனே வழிமறித்த மற்றயவர், “அடேய், கொரோனா நெருக்கடியில் மக்களுக்கு உதவுவதற்காக இருநூறு பில்லியன் பவுண்ஸ்களை திரட்டிய பிரிட்டன் அரசில், பிரிட்டன் பிரதமர் இருபது பில்லியன்களை சுருட்டிவிட்டார் என்று அங்கும் பத்திரிகைகள் எழுதித்தள்ளுகின்றனவாம். இருபது பில்லியன் இருந்தால், இலங்கை நிமிர்ந்து நிற்குமே” என்றார்.

இவர் சொல்ல வருவது, இந்த ராஜபக்ஷக்கள் மாத்திரமல்ல, உலகம் முழுக்க இதுதான் நடக்கின்றது. அதிகம் ஏன் ரணில் இருந்தபோதும் அதுதானே நடந்தது என்பதுதான்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வர, நாட்டில் உறுதியான அரசு ஒன்று தேவை. அது இடைக்கால அரசாக இருந்தாலும், அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்கின்ற அரசாக இருக்கவேண்டும். ஆனால், அதற்கான சாத்தியம்தான் தொடர்ந்து குறைந்துகொண்டே போகின்றது.

தற்போதைய பிரதமர் பதவி விலகினால்தான் இடைக்கால அரசை அமைக்கமுடியும். ஆனால், அவர் அதனைச் செய்யப்போவதில்லை என்பது தெரிகின்றது. ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தை நேற்றுக் கூட்டி அதில் தனது தலைமைக்கு ஆதரவைப் பெற்றிருக்கிறார் பிரதமர் மஹிந்த. அப்படியெனில், அவர் இடைக்கால அரசு என்ற யோசனையை இதன்மூலம் நிராகரித்துவிட்டார். இப்போது ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து, பத்தொன்பதாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும் பிரதமர் தீர்மானித்துவிட்டது தெரிகின்றது. அதனை எதிர்க்கட்சிகளும் ஆதரிப்பதால் அது இலகுவாகவே நடைமுறைக்கு வரலாம்.

ஆனால், அதன் பின்னர், மைத்திரி - ரணில் அரசு போல கயிறு இழுவை நடக்காமல் இருந்தால் நல்லது.!

அதற்கு முன்னர், மக்கள் திருப்திப்பட வேண்டும்.

**- ஊர்க்குருவி**



# ‘வடக்கின் பெரும் போர்’ சென். ஜோன்ஸ் 167/10!

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எதிரான பெருந்துடுப்பாட்ட போட்டியில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி 167 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்துள்ளது.

நேற்றையதினம் தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மத்திய கல்லூரி அணி 3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. 116ஆவது போட்டியாக மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு அண்டர்சன் சச்சின் - குகனேஸ்வரன் கரிசன் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த இணை 27 ஓவர்கள் இணைந்து ஆடி மத்திய கல்லூரியின் பந்துவீச்சாளர்களை சோதித்தது.

எனினும், இந்த இணை 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், கரிசன் 41 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆனார். அவர் 89 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 41 ஓட்டங்களை எடுத்திருந்தார். அடுத்து வந்த எபநேசர் ஜேசியல் அண்டர்சன் சச்சினுடன் இணைந்து நிதானம் காட்டினர். எனினும், இருவராலும் அதிக ஓட்டங்களைப் பெற முடியவில்லை. இந்நிலையில், 125 பந்துகளில் 20ஓட்டங்களைப் பெற்றிருந்த அண்டர்சன் சச்சின் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார்.

எபநேசர் ஜேசியல் 16, அந்தோனிப்பிள்ளை சுகேதன் 11 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பிய நிலையில், கமலபாலன் சபேசன், ஜெயச்சந்திரன் ஆஷ்நாத், சங்கீத் கிரேம் ஸ்மித் ஆகியோர் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

எனினும், எட்டாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய அன்ரன் அபிஷேக் அதிரடியாக ஆடினார். அவரின் ஆட்டத்தால் சென். ஜோன்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று வேகமாக உயர்ந்தது. அவருக்கு பக்கபலமாக தமிழ்க்கதிர் அபிரஞ்சன் நின்றார்.

அபிஷேக் 52 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்களை குவித்த நிலையில் ஆட்டமிழந்தார். அபிரஞ்சன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இறுதி விக்கெட்டாக கிருபானந்தன் கஜகர்ணன் ஓர் ஓட்டத்துடன் வீழ்ந்தார்.

84.1 ஓவர்களில் சென். ஜோன்ஸ் கல்லூரி 167 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. யோககதாஸ் விதுசன் மட்டும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் ஜெயதீஸ்வரன் விதுசன், விநாயகசெல்வன் கவிதர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் ரஜித்குமார் நியூட்டன், திலீப்குமார் கௌதம் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடக்க வீரர்களான தகுதாஸ் அபிலாஸ் ஓட்டம் எதையும் பெறாமலும், ஜெயதீஸ்வரன் விதுசன் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட மாகும்.

இன்றைய தினமும் இந்தப் போட்டியை டான் செய்தி அலைவரிசையில் நேரலையாக காணமுடியும். (ஐ)

## பொதுமக்களின் இயல்புவாழ்க்கைக்கு போராட்டங்கள் இடையூறாகக்கூடாது!

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 22

எதிர்ப்பாளர்களின் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படும் அதே வேளையில், பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளில் ஈடு படுவதற்கு அது தடையாக இருக் கக்கூடாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 12 மாவட்டங்களில் 18 இடங்களில் போராட்டங்கள் நடத்தப் பட்டதாகவும், பல முக்கிய வீதிகள் மறிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

சில எதிர்ப்புகள் காரணமாக பொது நடவடிக் கைகள் பாதிக் கப்பட்டுள்ளன. மருந்து மற்றும் உணவுப் பொருட்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவை ஊழியர்களும் அசௌ கரியங்களுக்கு உள்ளாகினர்.

சில போராட்டக்காரர்கள் பேருந்துகளை நிறுத்தி பயணி களை திருப்பினர்-என்றார். (அ)

## ஒரு கோடி ரூபாய் நகைகள் விரிவுரையாளர் வீட்டில் களவு

யாழ்ப்பாணம், ஏப். 22

திருநெல்வேலியில் உள்ள விரிவுரையாளர் ஒருவரின் வீடுடைத்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றிலேயே இந்த திருட்டுச் சம்பவம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

விரிவுரையாளரது குடும்பம் மாலை 5.30 மணியளவில் உறவினர் வீட்டுக்குச் சென்று இரவு 8.30 மணிக்கு வீடு திரும்பிய இடைநேரத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 50 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுப் போயுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் விரிவுரையாளரின் வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

வார இதழ்
ஈழநாடு
Eelanadu
22.04.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அரசியலில் பதவி விலகும் கலாசாரம்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி, தொடர்ந்தும் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. ஆனால், தான் பதவி விலகப் போவதில்லையென்று அவர் தெரிவித்து வருகின்றார். 69 இலட்சம் மக்களின் ஆதரவுடன் வெற்றிபெற்ற ஒருவர் எதற்காக பதவி விலக வேண்டுமென்னும் வாதம், ஜனாதிபதிக்கு ஆதரவானவர்களால் முன்வைக்கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபோது, அவர் ஒரு பலவீனமான ஜனதிபதியாகவே இருந்தார். 19ஆவது திருத்தச்சட்டம், ஜனாதிபதிக்கு பல்வேறு வழிகளிலும் கடிவாளமிட்டிருந்தது. 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அந்த கடிவாளங்கள் அகற்றப்பட்டன. சுதந்திரமான ஜனாதிபதியாக தன்னை அவர் நிலைப்படுத்திக் கொண்டார். நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்லப் போவதாக கூறினார். பல கவர்ச்சிகரமான அறிவிப்புக்களை மேற்கொண்டார்.

இதுவரையான சிங்கள ஜனாதிபதிகளிலிருந்து தன்னை முற்றிலும் வேறுபடுத்திக் காண்பிக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், அவரால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. இந்தப் பின்னணியில் நோக்கினால், அவரின் அனைத்து செயல்பாடுகளும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான், ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென்னும் கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன. ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட கொழும்புமைய, சிங்கள உயர் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரின் கோரிக்கையாக மட்டும் இருந்த விடயம், தற்போது மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் ஒரு விடயமாக மாறியிருக்கின்றது.

ஜனாதிபதி பதவி விலகுவாரா அல்லது - விலகமாட்டாரா என்னும் விவாதங்களுக்கு அப்பால், இலங்கையில் பதவி விலகும் அரசியல் கலாசாரம் இருக்கின்றதா - என்னும் கேள்வியிலிருந்துதான், இந்த விடயத்தை நாம் உற்றுநோக்க வேண்டும்.

மேற்குலக நாடுகளில், பதவி விலகும் அரசியல் கலாசாராமொன்று இருக்கின்றது. அதாவது, ஒரு விடயத்தில் தோல்வி ஏற்படுகின்றபோது, அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, குறித்த விடயத்திற்கு பொறுப்பான அரசியல் தலைவர் தனது பதவியை உடனடியாகவே இராஜிநாமா செய்துவிடுவார். பிரித்தானிய பிரதமராக இருந்த டேவிட் கமரோன், தனது நிலைப்பாடு தோல்வியடைந்தபோது, அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, உடனடியாகவே பதவியிலிருந்து விலகினார்.

இது ஓர் உதாரணம் மட்டுமே! அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இந்த விடயத்தை சாதாரணமாகக் காணலாம். குற்றச்சாட்டுக்களுடன் பதவியை அலங்கரிக்க மேற்குலக அரசியல் தலைவர்கள் விரும்புவதில்லை. இதனை ஓர் அரசியல் நாகரிகமாகவே அவர்கள் கருதுகின்றனர். ஆனால், ஆசிய நாடுகளில் இவ்வாறான அரசியல் நாகரிகம் பெரியளவில் வளர்ச்சியடையவில்லை.

தோல்வியடையும் அரசியல்வாதிகள் பதவி விலக வேண்டுமென்றால், சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல, பல தமிழ் அரசியல்வாதிகளும், தங்களின் பதவிகளை துறக்க வேண்டும். தங்கள் பொறுப்புக்களை, புதிய தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டும். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், அரசியல் தீர்வு விடயம் வெற்றிபெறாவிட்டால், அரசியலிலிருந்து ஒதுங்கும் எண்ணமிருப்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார். புதிய அரசியல் யாப்பு முயற்சி தோல்வியடைந்தபோது, அதற்கான பொறுப்பையேற்றுக் கொண்டு, அவர் அரசியலிலிருந்து ஒதுங்கவில்லை.

ஒவ்வொரு மேடைகளிலும் சமஷ்டி அரசியல் தீர்வு மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பே தங்களின் இலக்கென்று, சம்பந்தன் பேசிவந்தார். 13ஆவது திருத்தச்சட்டத்தை தாண்டி, தாம் எங்கோ சென்றுவிட்டதாகவும் கூறினார். ஆனால், விடயங்கள் எங்கும் செல்லவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எந்தவொரு முன்னேற்றமும் இதுவரையில் ஏற்படவில்லை. உண்மையில் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு சம்பந்தன் எப்போதோ, தனது பொறுப்புக்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால், பதவியிலிருப்பதற்கான காரணங்களை கண்டுபிடிப்பதிலேயே அனைவரும் கவனம் செலுத்தினர். ஏனெனில், இலங்கையில் அப்படியான அரசியல் கலாசாரம் சிங்களத்திலும் இல்லை, தமிழிலும் இல்லை, முஸ்லிம்களிடமும் இல்லை. மொத்தத்தில், தோல்விக்கு பொறுப்பேற்று, பதவிவிலகும் அரசியல் கலாசாரம் இன்னும் இலங்கையில் வளர்ச்சியடையவில்லை. இவ்வாறானதொரு சூழலில், ஜனாதிபதி பதவிவிலக வேண்டுமென்று மக்கள் கேட்கலாம். ஆனால், அதனை அரசியல்வாதிகள் கேட்பதுதான் வேடிக்கையானது.

# ஆழமறியாது காலை விட்டதை உணரும் பிரதமர் மஹிந்த!

அலசுவது இராஜதந்திரி



இன்றைய நாட்டு நிலவரத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே காரணம் என்று பிரதமரும் ஜனாதிபதியின் சகோதரருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தவறான பொருளாதார கொள்கை பற்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனிடமே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் தவறிழைத்துவிட்டதாக புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற சமயம் குறிப்பிட்டிருந்தார். தற்போது அவரை பதவியில் அமர்த்தியவரும், சகோதரருமான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக கொண்டுவர முன்னின்றதன் மூலம் தாமும் தவறிழைத்துள்ளதையே பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மட்டுமல்ல. நிதி அமைச்சராக இருந்த தமது மற்றைய சகோதரர் பஸில் ராஜபக்ஷவையும் அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டமை தாம் மேற்கொண்ட மற்றுமொரு தவறென்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறாமல் கூறியுள்ளமையையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பற்றி சில மாதங்களுக்கு முன்னர் தற்போதைய நிதி அமைச்சரான அலிசப்ரி இப்படிக் கூறியிருந்தார்.

“மஹதிர் மொஹமட் மலேசிய பிரதமராக இருந்து மலேசியாவை வளர்ச்சியடைய வைத்திருந்தார். சிங்கப்பூரை அதன் பிரதமராக இருந்த லீ குவான்யு வளர்ச்சியடைய வைத்திருந்தார். எனவே லீ குவான்யு போன்று இலங்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வளர்ச்சியடைய வைப்பார் என்பதில் சந்தேகமில்லை“ என்று நிதி அமைச்சர் அலி சப்ரி கூறியிருந்தார். ஆனால், அவ்வாறு கூறிய நிதி அமைச்சர் அலி சப்ரியே தற்போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் “பிச்சாடனர்” வேடத்தில் நிதி உதவி கோரி நிற்பதை அறிய முடிகின்றது. இது தவிர, இலங்கைக்கு நிதி உதவி வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் பரிந்துரை செய்யும்படி நிதி அமைச்சர் அலிசப்ரி இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் கோரியிருப்பது மிக வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து உதவியளிக்கும் என்று இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெருந்தன்மையோடு நிதி அமைச்சர் அலி சப்ரியிடம் கூறியுள்ளார். இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட கடந்த இரு மாதங்களில் எரிபொருளாகவும் , நிதி உதவியாகவும் இந்தியா தாராளமாகவே இலங்கைக்கு உதவியளித்து வருவதை அறிய முடிகின்றது.

இந்தியா, நேற்று முன்தினம்கூட கடன் திட்டத்தின் அடிப்படையில் 40,000 மெட்ரிக் தொன் டீசல் எரிபொருளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட கடந்த ஓரிரு மாதங்களில் இந்தியா மொத்தம் பலதரப்பட்ட ரகங்களிலும் நான்கு லட்சம் மெட்ரிக் தொன் எரிபொருளை இலங்கைக்கு வழங்கியுள்ளது.


இதன் மூலமாகவே பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருக்கும் இலங்கையின் போக்குவரத்துத்துறை ஓரளவேனும் தாக்குப்பிடிக்கக்கூடிய நிலையிலிருக்கின்றது. இந்தியாவின் உதவி இலஙகைக்கு தற்போது கிடைத்துவருகின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பில் தனது எதிர்பார்ப்புகளையும் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் பட்சத்தில் இலங்கையால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்படுகின்ற நிதியை மீளவும் திருப்பிச் செலுத்தக்கூடிய நிலை காணப்படுகின்றதா எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்தகைய பின்னணியிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது தவறுகளை சுயபரிசீலனை செய்து தவறுகளை தவறுகள் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் வெளிப்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுடன் உரையாடிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது சகோதரரும் தம்மால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவருமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தவறிழைத்துவிட்டார் என்று ஒப்புக்கொண்டு “ஆழமறியாது காலைவிட்ட” நிலையிலுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஏப்ரல் - 22 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 09
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சப்தமி




**மேடம்**
இன்று முக்கிய செயல் ஒன்றை பொறுப்புடன் செய்வீர்கள். உங்கள் உழைப்புக்கு ஏற்றபடி லாபம் வரும். நிதி நிலை சீராகும். எதிர்பார்த்த நன்மை சிறு தாமதத்திற்கு பிறகு கிடைக்கும்.

**இடபம்**
நண்பரின் ஆலோசனையால் உங்களுக்கு நன்மை கிடைக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு எதிர்பாராத நன்மை ஒன்று நடைபெறும். அலுவலகப்பணி எளிதாக முடியும். கலகலப்பு கூடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் அமைதி உண்டு. பேச்சினால் நன்மை வரும்.உழைப்பால் உயரும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.சுபச்செய்தி காலதாமதமானாலும் உறுதியாகி விடும்.

**கடகம்**
மனதிற்கு பிடித்தவரைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். பணியிடத்தில் புதிய யுக்திகளை கையாளுவீர்கள். உங்களுக்கு வரவேண்டிய பணம் வந்து சேரும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்**
நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி கிடைக்கும்.வியாபாரம், தொழிலில் மகிழ்ச்சியான திருப்பம் வரும்.செரிமானம் சம்பந்தமான பிரச்னை வராமல் கவனமாயிருங்கள்.

**கன்னி**
முந்தைய கடின உழைப்பிற்கான நற்பலன் இன்று கிடைக்கும்.குழந்தைகளால் பெருமிதம் அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும்.குடும்பத்திலுள்ள ஒருவருக்கு வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும்.

**துலாம்**
கடந்த சில நாட்களாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். பணத்தேவைகளுக்காக இன்று கூடுதலாக உழைப்பீர்கள்.எதிர்காலம் பற்றிய கவலை தீரும். நன்மைகள் நடைபெறும்.

**விருட்சிகம்**
மாணவர்கள் படிப்பு, விளையாட்டில் ஆர்வம் காட்டுவார்கள். பெரியவர்களுக்கு உதவி செய்வீர்கள். முன்னோரின் ஆசி கிடைக்கும்.தடைப்பட்டிருந்த வெளியூர், வெளிநாட்டுப் பயணம் உறுதியாகும்.

**தனுசு**
சொத்து சம்பந்தமான பிரச்னைகளைப் பேசி தீர்ப்பீர்கள். பிரியமானவர்களின் தேவை ஒன்றை நிறைவேற்றுவீர்கள்.உங்களுக்கு ஏற்பட்டிருந்த பிரச்சனை ஒன்று முடிவுக்கு வரும்.

**மகரம்**
புதிய முயற்சியை கையாளுவீர்கள். பெண்கள் உதவுவர்.குடும்பத்தினரின் உதவிகளும் ஆதரவும் உங்களுக்கு கிடைக்கும்.துணிவாக எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்**
உங்களால் நண்பர்கள் நன்மை அடைவார்கள். நிதி நிலை சீராகும்.கலைத்துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்பு தேடி வரும்.இன்று கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வீர்கள்.

**மீனம்**
இன்று உடல் ஆரோக்கியத்தில் அலட்சியம் காட்ட வேண்டாம்.குடும்பத்தினருக்கு உங்களால் நன்மை கிடைக்கும். அதிர்ஷ்டமான நாள். உங்கள் குழநதைகள் பாராட்டு, புகழ் மழையில் நனைவார்கள்.

# ஹிந்தி திணிப்புக்கு தமிழகத்தில் மட்டுமல்ல கர்நாடகத்திலும் எதிர்ப்பு

சென்னை, ஏப்.22

ஹிந்தி திணிப்பிற்கு தமிழகத்தில் மட்டுமல்ல கர்நாடகத்திலும் எதிர்ப்பு உள்ளது என்று திராவிடர் கழக தலைவர் கீ.வீரமணி தெரிவித்துள்ளார்.

கரூரில் நடந்த திராவிடர் கழக நீட் எதிர்ப்பு பரப்புரைப்பயணம் 16-ம் நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதையடுத்து கரூரில் தங்கியிருந்த தி.மு.க. தலைவர் கி.வீரமணி பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறும்போது, நீட் தேர்வை தமிழகத்தின் மீது திணிப்பதால் மருத்துவக் கனவோடு உள்ள ஏராளமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அரசியலமைப்புச்சட்டத்தின்படி இது மாநில உரிமைகளை பறிக்கும் செயலாகும்.

புதிய கல்விக்கொள்கை என்பது அனைவருக்கும் கல்வி என்பதை விட படிப்பு தடுப்பு கல்விச் சட்டம் எனலாம். குலக்கல்வித்திட்டத்தை தான் மீண்டும் தேசிய புதிய கல்வித்திட்டம் என அறிமுகம் செய்கின்றனர். புதிய கல்விக்கொள்கை என்பது ராஜாஜியின் பழைய குலக்கல்வி திட்டம்தான்.

தாய்மொழிக்கு முக்கியத்துவம் எனக்கூறி



3ஆவது மொழியாக சமஸ்கிருதம், ஹிந்தியை பரப்ப வேண்டும் என்பது தான் திட்டம். ஹிந்தியை படிக்க வைக்க ஹிந்தியை மறைமுகமாக திணிக்கின்றனர். ஹிந்தியை இணைப்பு மொழி என்கின்றனர்.

தமிழகம் மட்டும் ஹிந்தியை எதிர்க்கவில்லை. கர்நாடகாவில் இதற்கு எதிர்ப்பு உள்ளது. மறைமுகமாக சமஸ்கிருதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் நடவடிக்கையே இது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாமல்லபுரத்தில் பழங்கால கோவில் கலசம்

சென்னை, ஏப்.22

மாமல்லபுரத்தை ஆட்சி செய்த மன்னர் பராங்குசன் 7 கோயில்கள் கட்டியதாகவும் அதில் ஒன்று 108 திவ்ய தேசங்களில் 63ஆவது திவ்ய தேசமான தலசயன பெருமாள் கோயில் எனவும், 6 கோயில்கள் கட லில் மூழ்கியதாகவும் கூறப்படுகிறது.



மாமல்லபுரம் கடற்கரை கோவில் வடபகுதி மீனவர்கள் குடியிருப்புப் பகுதி கடலோரத்தில் நேற்று முன் தினம் மாலை கடல் உள்வாங்கியது. அப்போது பழங்காலத்து கோயில் கல்கலசம், தூண்கள், செங்கற்கள் கரை ஒதுங்கி இருந்தது.

கடற்கரைக்கோவில் வடிவமைத்தபோது கடல் பல மீற்றர் தூரத்துக்கு பின்னோக்கி இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது முதலாம் நரசிம்ம பல்லவ மன்னனால் சில சிறிய கோவில்கள் அங்கு கட்டப்பட்டதாகவும் காலப்போக்கில் கடல் முன்னோக்கி வந்த போது அந்தக்கோவில்கள் கடலில் மூழ்கி விட்டதாகவும் வரலாறு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் நேற்றுக்காலையில் இருந்தே உள்ளூர் மக்கள், சுற்றுலாப்பயணிகள் அப்பகுதிக்கு சென்று கரை ஒதுங்கிய கோவிலின் கருங்கற்கள் தூண்கள் கலசம் உள்ளிட்டவற்றை ஆச்சர்யத்துடன் பார்த்து வருகிறார்கள். இதனை ஆய்வு செய்ய தொல்லியல் துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# கால்நடைபராமரிப்பு உதவியாளர் பதவி: பொறியியல் பட்டதாரிகளும் விண்ணப்பம்!

## மாடுகளை பிடிக்க பயந்து நேர்முக தேர்வை விட்டு வெளியேறினர்!!

சென்னை,ஏப்.22

நேர்முகத்தேர்வில் பங்கேற்ற பொறியியல்துறை பெண் பட்டதாரிகள் ஏராளமானோர் மாடுகளை பிடிக்க பயந்து நேர்முகத்தேர்வை விட்டு பாதியில் வெளியேறினார்கள்.



குமரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள 48 பணியிடங்களுக்கு 5 ஆயிரத்து 906 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

கால்நடைபராமரிப்பு உதவியாளர் பதவிக்கான கல்வித்தகுதி 10 ஆம் வகுப்பு ஆகும். ஆனால் பட்டதாரிகள், பொறியிலயல் பட்டதாரிகள், தொழில் படிப்பு படித்தவர்கள் என பலரும் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்று வருகிறது.

2ஆவது நாளான இன்றும் நேர்முகத் தேர்வுக்கு 750 பேருக்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டு இருந்தது. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு காலையிலேயே அண்ணா விளையாட்டு அரங்கத்தில் பெண்கள், இளைஞர்கள் ஏராளமானோர் குவிந்திருந்தனர்.பின்னர் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டவர்கள் மாடுகளை கையாள்வது எப்படி என்பது குறித்தும் சைக்கிள் ஓட்டிக்காண்பித்தனர்.

நேர்முகத்தேர்வில் பங்கேற்ற பொறியியல் பெண் பட்டதாரிகள் ஏராளமானோர் மாடுகளை பிடிக்க பயந்து நேர்முகத்தேர்வை விட்டு பாதியில் வெளியேறினார்கள். பெண்கள் சிலர் சைக்கிள் ஓட்ட முடியாமல் வெளியே சென்றனர்.



# யாழ். மேயர் மணிவண்ணனுக்கு பிரான்ஸில் தமிழர்கள் வரவேற்பு

பரிஸ், ஏப். 22

யாழ்.மாநகரசபை முதல்வர் விசுவலிங்கம் மணிவண்ணன், யாழ். மாரநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன் ஆகியோர் உத்தியோகபூர்வ பயணமாக பிரான்ஸ் நாட்டுக்கு சென்றுள்ளனர்.

மணிவண்ணன் குழுவினரை பிரான்ஸ் சர்வதேச விமான நிலையமான பாரிஸ் சார்ள்ஸ் டி கோலில் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

பிரான்ஸ் நாட்டு மாநகர சபைகளின் முதல்வர்கள், பிரான்ஸ் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் அழைப்பை ஏற்று இவர்கள் அங்கு சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் மாநகர முதல்வர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களுடனான சந்திப்புக்களும் புலம்பெயர் தமிழர்களுடனான மக்கள் சந்திப்புக்களும் இன்று முதல் நடைபெறும் என கூறப்பட்டது.

(அ)

# ரம்புக்கனை பொலிஸ் பிரிவில் ஊரடங்கு சட்டம் நேற்று தளர்வு

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமுலில் இருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று அதிகாலை 5 மணி முதல் தளர்த்தப்பட்டது.

ரம்புக்கனை பிரதேசத்தில் போராட்டம் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலையையடுத்து ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

போராட்டத்தின் போதான மோதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரிகள் உட்பட 27 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# இலங்கைக்கு நாணய நிதியம் நிபந்தனை விதிக்கவேண்டும்

## அமெரிக்கத் தூதுவரிடம் மனோ வலியுறுத்து

கொழும்பு, ஏப். 22

**இலங்கையில் இன்று போராடும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையை அவிழ்த்து விடவேண்டாம் என்ற நிபந்தனையை, சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவும்போது விதிக்கவேண்டும். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழரின் இருப்பை பதிவு செய்துகொண்டு எமது மக்களை பற்றிய அமெரிக்காவின் அக்கறையை இலங்கை தொடர்பான உங்கள் கொள்கை நிலைப்பாடுகளின்போது வெளிப்படுத்துங்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன், அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார்.**

தமிழ் முற்போக்குக் கூட்டணி தூதுக்குழு நேற்று முன்தினம் அமெரிக்க தூதுவரை சந்தித்து உரையாடியது. கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். அமெரிக்க தரப்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங். அரசியல் துறை அதிகாரி ரூபி வுட்சைட் ஆகியோர் கலந்துகொண்டனர். மனோ கணேசனின் செயலாளர் பிரியாணி குணரட்னவும் உதவியாளராக கலந்துகொண்டார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. தெரிவிக்கையில்-

நாணய நிதியம் இலங்கைக்கு உதவ நினைக்கிறது. நன்றி. ஆனால், அதை ஜனநாயக நிபந்தனையுடன் செய்க. போராளிகள் மீது வன்முறை கூடாது. காலிமுகம் உட்பட



நமது போராளிகள் உலகில் மிக கட்டுப்பாடான போராளிகள். அமெரிக்க தூதர் ஜூலி சங்கிடம், ரம்புக்கனை நிகழ்வுக்கு ஒரு மணி நேரத்துக்கு முன் கூறினேன். இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் அரசியல் சமூக பொருளாதார அபிலாஷைகளுக்கு இலங்கை பரப்புக்கு உள்ளே தீர்வுகள் வேண்டும் -என்றார்.

இந்த சந்திப்பின்போது, மலையக தமிழரின் அரசியல் அபிலாஷை ஆவணத்தை அமெரிக்கத் தூதுவரிடம் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கையளித்தார்.

இலங்கையில் தென்னிலங்கையில் மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார வாழ் நிலைமைகள் பற்றி அமெரிக்க தூதுவர் கேட்டு தெரிந்துகொண்டார்.

தான் கொரிய வம்சாவளி அமெரிக்கர் என்பதில் பெருமை அடைவதாகவும், இந்நிலையில் தமது நாட்டின் பன்மைத் தன்மை தமக்கு பலம் சேர்த்துள்ளதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். இதுவே இலங்கையும் எதிர்பார்க்கும் எதிர்காலம் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர்கள் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினர்.

(அ)

# நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிக்கும் யோசனை சபாநாயகரிடம்

கொழும்பு, ஏப். 22

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் யோசனை, சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, இந்த யோசனையை கையளித்துள்ளதாக பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோது சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் நடத்தப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், கொலை செய்யப்பட்டவர்களுக்காக பாராளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இவ்வாறு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

## ரம்புக்கனை தாக்குதல் சம்பவம்

# பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்னவுக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, இன்று முற்பகல் 11 மணிக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைக்களுக்கமைய, பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர், கேகாலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் பேர் காயமடைந்துள்ளமை கறிப்பிடத்தக்கது.

(அ)

# தமிழ் மக்களின் நீண்டகால கேள்விக்கு தெற்கு போராட்டங்களில் பதிலுண்டா?

## தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 22

ஒரு தேசமாக எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான தமிர்களின் நீண்டகாலக் கேள்விக்கு பதிலேதும் உண்டா? என தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி எழுப்பியுள்ளது.

அரசை பதவி விலகக் கோரி தெற்கில் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் இளைஞர்களிடம் இந்த கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள், இளைஞர்களுக்கு எம் தோழமையைத் தெரிவிக்க விரும்புகின்றோம். உறுதியாகத் தெரிவிக்கின்றோம். ஆனால் நீங்கள் இன்று போராடப் புறப்பட்டதற்கான காரணங்களான பொருளாதார விடயங்கள் எம்மையும் தாக்குகின்றனவே. ஆனாலும், எம் தோள்களை உங்களுடன் இணைப்பதில் உள்ள மனத் தடைக்கான காரணம் தமிழர்களாகிய எம் மனதில் எழுந்து நிற்கும் அச்சமும், களைப்பும் தருகின்ற கேள்வியே.

காலி முகத்திடலில் இருந்து முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள பௌத்த மேலாதிக்க அபிலாஷைகளுக்கு மாற்றீடுகள் முன்வைக்கப்படவில்லை. வெறுமனே முன்மொழியப்பட்டுள்ள ஆட்சி மாற்றம் தமிழருக்கு எதையும் தந்துவிடப் போவதில்லை-என்றுள்ளது. (அ)

# விகாரைகளுக்கு வரவேண்டாம்!

## புதிய அமைச்சர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 22

**"புதிய அமைச்சரவையை ஏற்கமுடியாது.எனவே, ஆசிர்வாதம் பெறுவதற்கு எவரும் விகாரைகளுக்கு வந்துவிடவேண்டாம்." _ என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதமர் உட்பட அமைச்சரவை பதவி விலகி அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் யோசனை முன்வைத்தார்கள். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

எனவே, புதிய அமைச்சரவையை நாம் ஏற்கமாட்டோம். ஆசிர்வாதம் பெறுவதற்கு



விகாரைகளுக்கு வந்துவிடவேண்டாம். 20 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டும். பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# முகக்கவசம் அணிவதை மக்கள் கைவிடக்கூடாது!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

நாட்டில் நிலவும் சுகாதார சீர்கேடு மற்றும் ஸ்திரமற்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு முகக்கவசம் அணியும் பழக்கத்தை தொடருமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் முகக்கவசம் அணிவது மற்றும் பொது இடங்களில் வளாகத்துக்குள் நுழையும்போது உடல் வெப்பநிலையை சரி பார்ப்பது ஆகியவை கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார அதிகாரிகளால் தளர்த்தப்பட்டன.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் நிபுணர்கள் அடங்கிய சிறப்புக் குழு எடுத்த முடிவைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்ட தாக அரச மருத்துவ அதிகா ரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எனினும் தொற்றுநோய்களின்போது நடைமுறையில் இருந்த அடிப்படை சுகாதார நடவடிக்கைகளைத் தொடருமாறு பொதுமக்களிடம் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

முகக்கவசம் உட்பட்ட சுகாதார நடைமுறைகள் காரணமாக சுவாச அமைப்பு தொடர்பான நோய்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருந்தாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்

இந்தநிலையில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்றாலும், போராட்டங்கள் மற்றும் பிற குழு நடவடிக்கைகளில் பங்கேற்கும் போது அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை மக்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று ஷெனால் பெர்னாண்டோ வலியுறுத்தினார். (அ)

# இலங்கைக்கு மேலும் 500 மில்லியன் டொலர்

## இந்திய அரசு இணக்கம்

கொழும்பு, ஏப். 22

இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், பங்களாதேஷுக்கு செலுத்தவேண்டிய 450 மில்லியன் டொலர் கொடுப்பனவை ஒத்திவைப்பதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# ரம்புக்கனை படுகொலைக்கு நீதி கோரி சிங்கள நடிகர் ஒருவர் உண்ணாவிரதம்!





கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை பகுதியில் இடம்பெற்ற பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு நீதி கோரி காலிமுகத்திடலில் சிங்கள நடிகர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

காலி முகத்திடல் போராட்ட களத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் ரம்புக்கனை படுகொலைக்கு நீதி கோரி சிங்கள நடிகர் குணசேகர நேற்று அதிகாலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ரம்புக்கனை சம்பவத்தில் இரத்தம் சிந்தப்பட்டதை குறிக்கும் வகையில் வெள்ளைத் துணி ஒன்றில் சிவப்புச் சாயத்தை தெளித்து உடலின் மேல் போர்த்தியவாறு அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதேவேளை, ரம்புக்கனை படுகொலை சம்பவத்துக்கு நீதி கோரி மாதிரி சடலங்களுடன் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ரம்புக்கனை சம்பவத்தில் உயிரிழந்தவருக்கு காலி முகத்திடல் போராட்ட களத்தில் நேற்றுமுன் தினம் 2ஆவது நாளாகவும் அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்று முன் தினம் இரவு காலி முகத்திடலில் ஒன்றுகூடியிருந்தவர்கள் தமது கைபேசி மூலம் ஒளி பாய்ச்சி அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேசாலை மீனவர்கள் இருவர் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது!

## இந்தியா செல்ல முயன்றதாக குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 22

இந்தியா செல்ல முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் மன்னார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்ட அவர்கள் நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பொலிஸ் காட்டுமிராண்டித்தனம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்

## அசாத் சாலி கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் தொடர்புபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும், அமைதியான வழியில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு பொலிஸார் மேற்கொண்டு வரும் குறுக்கு நடவடிக்கைகளுக்கு இனியாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மக்கள் பசியாலும் பட்டினியாலும் துன்பப்படுவதனால்தான் வீதிகளில் இறங்கி தமது மனக்கவலைகளை ஆர்ப்பாட்டங்களாகவும் கோஷங்களாகவும் வெளிப்படுத்துகின்றனர்.

காய்ந்த வயிற்றில் புரட்சி பிறக்கிறது என்பார்கள். அந்தவகையில், இன்று நாட்டு மக்கள் சமைப்பதற்கு எரிவாயு இல்லாமலும், தமது அன்றாடத் தொழில்களை மேற்கொள்வதற்கு எரிபொருள் இல்லாமலும் கஷ்டப்படுகின்றனர்.

நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் விண்ணைத் தொடுகின்றது. குறைந்தபட்சம்



பாண், மா, பேக்கரி பண்டங்களுக்குக் கூட பாரிய விலை ஏற்றப்படுகின்றது. உழைப்பதற்கு வழியின்றி வீடுகளிலே முடங்கிக் கிடைக்கும் இந்த மக்கள், அரசை எப்படியாவது விரட்ட வேண்டும் என வீதிகளிலே இறங்கி போராடி வருகின்றனர்.

அப்பாவி மக்களின் இந்த உணர்வுகளை புரிந்துகொள்ளாமல், காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தும் பொலிஸாரின் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

முப்படைகளும் மக்களின் உணர்வுகளை மதித்து, தமது கடமைகள் மேற்கொள்ளவேண்டும். ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கும், காயமடைந்தவர்களுக்கும் எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்-என்றார். (அ)

# 20ஆவது திருத்த சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டும்

## மகாநாயக்க தேரர்கள் கூட்டாக வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 22**

**நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கத்துக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து, அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் கூட்டறிக்கை ஊடாக வலியுறுத்தியுள்ளனர்.**

19 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சிறப்பம்சங்களை உள்ளடக்கிய வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்ள மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கருத்திற்கொண்டு, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மகாநாயக்க தேரர்களால், கூட்டுச் சங்கப் பிரகடனமொன்று வெளியிடப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு, இவற்றுக்கு தீர்வைக் காண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தி, யோசனைகளையும் முன்வைத்து மகாநாயக்க தேரர்களால் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் குறித்த கூட்டறிக்கை அனுப்பி



வைக்கப்பட்டுள்ளது.

அஸ்கிரிய , மல்வத்தை, அமரபுர மற்றும் ராமான்ய ஆகிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களால் வெளியிடப்படும் கூட்டறிக்கை தெற்கு அரசியலில் பெரும் தாக்கத்தை செலுத்தக்கூடியது.

ஆட்சியாளர்களால் அவ்வளவு எதிளில் தட்டிகழித்து விடவும் முடியாது. எனவே, கூட்டு சங்க பிரடகனமொன்றை வெளியிட அவர்கள் எடுத்துள்ள முடிவு தற்போதைய நெருக்கடி சூழ்நிலையில் முக்கியத்துவம்மிக்கதாக கருதப்படுகின்றது.

புதிய அமைச்சரவை நியமனம் பிரச்னைக்கு தீர்வு அல்லவெனவும் சுட்டிக்காட்டியுள்ள மகாநாயக்க தேரர்கள், கடந்த 4 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தாமை தொடர்பில் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமைக்கு இந்நாட்டை ஆட்சிசெய்த அனைத்து அரசுகளும் பொறுப்புக்கூறவேண்டும்." - எனவும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு ஊடக சந்திப்பொன்றும் மேற்படி மகாசங்கத்தினரால் நடத்தப்பட்டது. இதன்போது கருத்து வெளியிட்ட ஓமல்பே சோபித தேரர்-

பிரதமர் உள்ளடங்கலான அமைச்சரவை நீக்கப்பட வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் கோரினர். அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

புதிய அமைச்சரவையை மகாசங்கத்தினர் ஏற்கவில்லை. எனவே, ஆசிர்வாதம் பெறுவதற்கு விகாரைகளுக்கு வரவேண்டாம் என கூறிவைக்க விரும்புகின்றோம்-என்றார். (அ)

# "நிறைவேற்றதிகாரம் நீக்கப்படின் பிரதமராகுவதற்கு ரணில் தயார்!"

கொழும்பு, ஏப். 22

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களை நீக்கி காபந்து அரசாங்கமொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்கத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.



எவ்வாறாயினும், அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் அமுலில் உள்ளபோது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அவ்வாறான எந்தவொரு பதவியையும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் உணவுப் பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 22

தொண்டைமானாறு- சந்நிதியான் ஆச்சிரமத்தால் நாட்டின் இன்றைய நிலை கருதி கண்டாவளை- கோரக்கன்கட்டு கிராம மக்களுக்கு 230 000 ரூபா அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளை பிரதேச செயலாளரின் நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட கோரக்கன்கட்டு கிராமத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 46 குடும்பங்களுக்கு 230000 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டமானது கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோரக்கன்கட்டு கிராமத்தில் அமைந்துள்ள கிராமசேவையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கினார்.

அவர்களுடன் கோரக்கன்கட்டு இல 48 பிரிவை சேர்ந்த கிராம சேவையாளர், சமூக செயற்பாட்டாளர் தயாபரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர். (அ-2)

# நிறைவேற்றதிகாரத்தை நீக்கும் யோசனைக்கு நாமல் வரவேற்பு

கொழும்பு, ஏப். 22

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் சபையில் முன்வைக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமையை நீக்குவதற்கான யோசனையை வரவேற்பதாக முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்வது குறித்து ஜனாதிபதியும் கலந்துரையாடி வருவதாக அவர்



குறிப்பிட்டார்.

இதற்கு முன்னைய அரசாங்கங்களும் ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குவதாக தெரிவித்திருந்தாலும் அது நடைமுறைக்கு வரவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# 40,000 மெற்றிக் தொன் டீசல் நாட்டுக்கு வந்தது

கொழும்பு, ஏப். 22

இலங்கைக்கு மேலும் 40,000 மெற்றிக் தொன் டீசல் வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்த டீசல் வந்தடைந்துள்ளது.

கடந்த இரு மாதங்களில் இந்தியாவிடம் இருந்து 400,000 மெற்றிக் தொன் எரிபொருள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# சஜித்- சீனத்தூதர் சந்திப்பு!

கொழும்பு, ஏப். 22

இலங்கைக்கான சீனத் தூதுவர் குயி சென்ஹொன்னுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டிய சீனாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் தற்போதைய நிலையிலிருந்து மீள்வதற்கு சீனாவின் ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தூதுவர் தலையிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இராஜதந்திர உறவுகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டது. (அ)

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவேண்டும்

## செந்தில் தொண்டமான் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

"தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்துள்ள முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்து தயவு தாட்சணையின்றி தண்டிக்கப்படுவார்கள் என்பதாகும்.

எனவே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்." - எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# இயற்கை முறையில் விளைந்த நெல் களஞ்சியப்படுத்தப்பட்டது!



மன்னார், ஏப். 22

இயற்கை முறையில், நஞ்சற்ற விவசாய செய்கை மூலம் கிடைத்த நெல்லை களஞ்சியப்படுத்தும் திட்டம் நேற்று மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் அதாவது மெசிடோவினால், கடந்த வருட இறுதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெல் செய்கை மூலம் பெறப்பட்ட, பாரம்பரிய நெல் நேற்று வைபவ ரீதியாக, மன்னார் முருங்கன் நெல் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையின் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு மெசிடோ நிறுவனத்தால் இலவசமாகப் பாரம்பரிய நெல் விதைகளான சீனட்டி, மொட்டக் கறுப்பன் போன்ற மரபணு மாற்றப்படாத விதைகள் மற்றும் நெல் செய்கையை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டு, இயற்கை முறையில், விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட, விவசாய செய்கையின் அறுவடை, இந்த வாரம் இடம்பெற்ற நிலையில், 10 ஆயிரம் கிலோ விதை நெல் நேற்று விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு, எதிர்வரும் போக செய்கைக்காக, தயார் நிலையில் உள்ள விவசாயிகளுக்கு, இயற்கை முறை செய்கைக்காக, இலவசமாக வழங்குவதற்கு என களஞ்சியப் படுத்தப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மெசிடொ நிறுவன பனிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, மெசிடோ நிறுவன அதிகாரிகள் பங்கேற்று, நெல் தூய்மைபடுத்தல் மற்றும் தொற்று நீக்குதல், களஞ்சியப் படுத்தல் செயல்பாட்டை ஆரம்பித்து வைத்தனர். (ஐ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மன்னாரில் நினைவேந்தல்!

மன்னார், ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் மன்னாரில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இதில், ஈஸ்டர் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்காக சுடர் ஏற்றி, பொது அஞ்சலி படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. மத தலைவர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

## நேற்று 35 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஏப். 22

கொரோனா தொற்று உறுதியான மேலும் 35 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 63 ஆயிரத்து 41ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 3,984 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## லிட்ரோ நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, ஏப். 22

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர் விஜித ஹேரத் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தெஷார ஜயசிங்க அண்மையில் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார். (ஐ)

# ரம்புக்கனை துப்பாக்கி சூடு; 3 பொலிஸாருக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூடு தொடர்பில் வெளிப்படையான மற்றும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் கேகாலை பொலிஸ் பிரிவின் பல உயர் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார்.

உள்ளூரிலும், சர்வதேச அளவிலும் இந்த சம்பவத்திற்கு கண்டனங்கள் குவிந்து வருகிறது.

தற்போது,கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கேகாலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (SSP) மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அத்தியட்சகர் (SP) மற்றும் பொறுப்பதிகாரி (OIC) ஆகியோர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணையை மேற்கொள்ளவும், சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மற்றும் சாட்சிகள் விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடாமல் கலந்துகொள்ளவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மூன்று நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 (1) விதியின் கீழ் கேகாலை மாவட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக பொலிஸாருக்கு ஆதரவளிக்க இலங்கை இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை நாரணபத்தவில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில், பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய சி.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மூன்று நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபரின் இறுதிக கிரியை நிறைவடையும் வரை முப்படையினர் ரம்புக்கனை பகுதியில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மீனவர்களுக்கு எரிபொருள் விநியோகம் நடக்கவில்லை!

### மீன்பிடி அமைச்சின் செயலரின் அறிக்கைக்கு மறுப்பு

வடமராட்சி, ஏப். 22

மீன்பிடி அமைச்சின் செயலாளர் மீனவர்களுக்கு தடையின்றி எரிபொருள்கள் விநியோகம் இடம்பெறுவதாக வெளியிட்ட அறிக்கைக்கு மறுப்பு தெரிவித்துள்ளார் வட மாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் தலைவர் கா. அண்ணாமலை.

நேற்று அவர் தனது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த மறுப்பை தெரிவித்தார்.

தொடர்ந்தும், மீன்பிடி அமைச்சின் செயலாளர் அறிவித்தது போன்று எந்த விதமான எரிபொருள் விநியோக நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. எரிபொருள் கிடைக்காமல் மீனவர்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (ஐ-2)





ஈஸ்டர் தாக்குதல்

## மலையகத்தின் பல இடங்களில் அஞ்சலி, எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் ஈஸ்டர் தினத்தில் தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு நினைவேந்தல் நிகழ்வு மலையகத்தில் பல இடங்களிலும் இடம்பெற்றது.

அந்தவகையில் நுவரெலியாவில் புனித சவேரியார் தேவாலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

இதனையடுத்து, ஆலய வளாகத்தில் அருட்தந்தை சுகத்ரோகன தலைமையில் காலை 8.45 மணிக்கு ஆலய மணி ஓசை எழுப்பப்பட்டு, மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு, தற்கொலை குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி வேண்டும் என கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# அஞ்சலிக்குறிப்பு:

# எழுத்தாளர் கோமகன் மறைந்தார்!

■ முருகபூபதி

எழுத்தாளரும் "நடு" இணைய இதழின் ஆசிரியருமான கோமகன் பாரிஸிலிருந்து விடுமுறைக்கு இலங்கைக்கு வந்து திரும்புகையில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் மாரடைப்பு வந்து மரணமடைந்தார் என்ற செய்தி அதிர்ச்சியைத்தருகிறது.

அற்பாயுளில் மறைந்திருக்கும் கோமகனின் இயற்பெயர் இராஜராஜன். சுறுக்கர் என்ற புனைபெயரையும் கொண்டிருந்தவர்.

சிறுகதை, பத்தி எழுத்துக்கள், நேர்காணல் முதலான துறைகளில் தொடர்ந்து எழுதிவந்தவர். கடந்த 2017 ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட குரலற்றவரின் குரல் நேர்காணல் தொகுப்பு இலக்கியப்பரப்பில் கவனத்தை பெற்றிருந்தது.

கோமகனின் தனிக்கதை, முரண் முதலான சிறுகதைத் தொகுப்புகளையும் வரவாக்கியிருப்பவர்.

எழுத்தாளர்கள் அனைவருமே ஒரே நேர்கோட்டில் பயணிக்கமுடியாது. மாற்றுக்கருத்துக்களுடன் போராடும் இயல்புள்ளவர்கள்தான் எழுத்தாளர்கள். அவர்களின் இயல்புகளை நன்கு தெரிந்துகொண்டே தொடர்பாடலை மேற்கொண்டு நேர்காணல் தொகுப்பினை வெளியிடுவதே பெரிய



சாதனைதான்.

அச்சாதனையை குறிப்பிட்ட குரலற்றவரின் குரல் தொகுப்பின் மூலம் நிகழ்த்தியவர் கோமகன்.

எதுவரை, வல்லினம், காலம், எக்ஸெல், முகடு, ஜீவநதி, நடு, மலைகள், ஒரு பேப்பர், அம்ருதா, தினகரன், தினக்குரல் முதலான இதழ்கள், இணைய இதழ்களில் தொடர்ந்து எழுதியவர். நெருடிய நெருஞ்சி, வாடா மல்லிகை ஆகிய தலைப்புகளில் பயண இலக்கியங்களும் வரவாக்கியிருப்பவர்.

சர்வதேச இலக்கிய ஆளுமைகளின் ஆக்கங்களை தமிழுக்கு மொழி பெயர்த்தல், ஈழத்து, புலம் பெயர், தமிழக படைப்பாளிகளின் ஆக்கங்களை காய்த்தல் உவத்தலுக்கு இடமின்றி வாசகப் பரப்புக்கு கொண்டு செல்லல், ஒய்வு நிலையில் இருக்கும் ஈழத்து இலக்கிய ஆளுமைகளை வெளிக் கொணரல் முதலான நோக்கங்களுடன், பிரான்ஸிலிருந்து "நடு" என்னும் இணைய இதழையும் வெளியிட்டு வந்தவர்.


சினிமா சிறப்பிதழ், கிழக்கிலங்கை சிறப்பிதழ், மலையக சிறப்பிதழ் முதலானவற்றையும் "நடு" இணைய இதழ் வெளியிட்டிருக்கிறது.

பிரான்ஸிலிருந்து வெளிவரும் ஆக்காட்டி இதழில் கோமகன், இலங்கையிலிருக்கும் எழுத்தாளர் யோ. கர்ணனின் நேர்காணலை பதிவுசெய்த முதல் அனுபவத்தின் தொடர்ச்சியாக மேலும் 13 பேரைத் தொடர்பு கொண்டு குரலற்றவரின் குரல் தொகுப்புக்காக உழைத்தவர்.


குறிப்பிட்ட நூலின் பின்புற அட்டையில் இதன் உள்ளடக்கம் பற்றிய குறிப்பு தெரிவிக்கும் பின்வரும் செய்தியிலிருந்து, கோமகனின் உழைப்பினை புரிந்துகொள்ள முடியும்.


"உலகத்திசைகளில் வாழும் இலங்கையின் தமிழ்மொழிச்சமூக ஆளுமைகள் 14 பேருடன் கோமகன் நடத்திய இந்த நேர்காணல்களில், அரசியல், கலை, இலக்கியம், போராட்டம், பெண்ணியம், சாதியம், மதம் என இடையீடு செய்யும் படிகளிடையே பல்வேறு திறப்புகள் நிகழ்கின்றன. அரசியல், கலை, இலக்கியம், போராட்டம், பெண்ணியம், சாதியம் போன்றவற்றில் எப்போதும் சர்ச்சைக்கும் விவாதங்களுக்குமான இடங்களிருப்பதுண்டு. இந்த நேர்காணல்களிலும் அத்தகைய இடங்களும் புள்ளிகளும் நிறைய உள்ளன. இந்த நேர்காணல்களை வாசிக்கும் போது, பல்வேறு வகையான ஆளுமைகளோடு தனியே நின்று களமாடுவதாகத்தோன்றும். அவரே மையமாக நின்று ஏனையவர்களுடன் வாள் சுழற்றுகிறார். ஊன்றிக் கவனித்தால், நேர்காணல் என்பது ஒரு சமர்க் கலையே. எழுப்பப்படும் கேள்விகளே எதிராளுமையைத் திறப்பது என உணரலாம். கேள்விகளின் மூலமாக வரலாற்றையும் சமகாலத்தையும் திறந்து எதிர்காலத்தின் மீது ஒளி பாய்ச்சுவதற்கு கோமகன் முயற்சிக் கிறார். கலை, இலக்கியத் துறையில் செயற்படும் ஆளுமைகளின் நேர் காணல்களாக இவை இருந்தாலும் அரசியல், கலை, இலக்கியம், போராட்டம், பெண்ணியம், சாதியம், மதம் எனச் சகலவற்றைப் பற்றியும் இந்த நேர்காணல்கள் பேசுகின்றன."

எங்கள் இலக்கியக் குடும்பத்தில் அயர்ச்சியின்றி இயங்கிவிட்டு விடைபெற்றுள்ள எழுத்தாளர் கோமகனுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலி.




## குரலற்றவரின் குரலை ஒலிக்கச்செய்தவரின் குரல் ஓய்ந்தது!!




**அரசியல், கலை, இலக்கியம், போராட்டம், பெண்ணியம், சாதியம் போன்றவற்றில் எப்போதும் சர்ச்சைக்கும் விவாதங்களுக்குமான இடங்களிருப்பதுண்டு. இந்த நேர்காணல்களிலும் அத்தகைய இடங்களும் புள்ளிகளும் நிறைய உள்ளன. இந்த நேர்காணல்களை வாசிக்கும் போது, பல்வேறு வகையான ஆளுமைகளோடு தனியே நின்று களமாடுவதாகத் தோன்றும். அவரே மையமாக நின்று ஏனையவர்களுடன் வாள் சுழற்றுகிறார். ஊன்றிக் கவனித்தால், நேர்காணல் என்பது ஒரு சமர்க்கலையே.**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

CHANNEL


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்


01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

04. (3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. (2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

06. (2) 

07. (3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## கல்வி tv CHANNEL-1

**22.04.2022 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

**22.04.2022 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# ஒட்டமாவடியில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் பெரும் போராட்டம்

## பெருமளவானோர் திரண்டு கோஷம்







**மட்டக்களப்பு, ஏப். 22**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு கண்டனம் தெரிவித்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை ஓட்டமாவடி பிரதேசத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஓட்டமாவடி வான் சாரதிகள் சங்கம், ஓட்டோச் சாரதிகள் சங்கம், உழவு இயந்திரச் சாரதிகள் சங்கம், மீனவர் சங்கம், வர்த்தகர் சங்கம் என்பன இணைந்து ஓட்டமாவடி வான் சாரதிகள் சங்கத் தலைவர் கே.பி.எம்.சாஜகான் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

ஓட்டமாவடி பசார் பள்ளிவாசல் முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு-திருகோணமலை பிரதான வீதி வழியாக ஓட்டமாவடி பிரதேச சபை வரை சென்று அங்கிருந்து மீண் டும் ஓட்டமாவடி பசார் பள்ளி வாசல் வரை ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு எதிரான "ஹோ கோம் கோட்டா, சாட்டை எடுத்து நாட்டை திருத்து, இளம் தலைமுறையை நீ வழிநடத்து, தீமைக்கெதிராய் நானும் வருவேன் தனி ஒருவனாய் உன்முன் படையெடுத்து, குட்டப்பட்ட கூட்டம் குனிந்த தலை போதும், பொறுமை விழும் போது சீறும் சிறுத்தையாகும் என பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணமும், அரசாங்கத்தை சித்தரிக்கும் வகையிலான பதாதைகளுடனும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது வாழைச்சேனை பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டதை காண முடிந்தது.

(அ)

# ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு மட்டக்களப்பில் மக்கள் நேற்று அஞ்சலி!



மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு சீயோன் தேவலாயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு நினைவேந்தல் சீயோன் தேவாலயத்திலும் காந்திபூங்கா மற்றும் கல்லடி பாலத்துக்கருகிலுள்ள நினைவு தூபிகளிலும் நேற்று வியாழக்கிழமை காலை 9.05 மணிக்கு இடம்பெற்றது. இந்த நினைவேந்தல்களில் உயிரிழந் தவர்களின் உறவுகள் உட்பட பொதுமக்கள் கலந்துகொண்டு மலர் தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2019 ஆம் ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளால் சீயோன் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 93 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு குண்டுவெடிப்பு இடம்பெற்ற சீயோன் தேவலாயத்தில் போதகர் ரொசான் மகேசன் தலைமையில் உயிரிழந்த வர்களின் ஆத்மசாந்தி வேண்டி இடம்பெற்ற விசேட ஆராதனையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை, மட்டு காந்தி பூங்காவில் உயிரி ழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் மட்டு மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவான் தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் கலந்துகொண்டு மலர் தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து மட்டு கல்லடி பாலத்துக்கு அருகில் தேவாலய குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் உறவுகளால் அமைக்கப்பட்ட தூபியில் பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் உயிரிழந்தவர்களின் உறவுகள் மலர் வளையம் வைத்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் உயிரிழந்தவர்களுக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# எமது மக்கள் நலப் பணிகள் முழு தேசத்துக்கும் தொடரும்

## சிவநேசதுரை சந்திரகாந்தன்

செயலூக்கமும் வினைத்திறனும் மிக்க ஊழலற்ற எமது மக்கள் நலப் பணிகள் இந்த இராஜாங்க அமைச்சு பொறுப்பின் ஊடாக முழுத் தேசத்துக்குமான தொன்றாக தொடரும் என கிராமிய வீதிகள் மற்றும் உள்கட்டுமான இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் மற்றும் உள்கட்டுமான இராஜாங்க அமைச்சராக நேற்றையதினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று முன்தினம் அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"எமது தேசம் எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளிலிருந்து மீண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள புதிய அமைச்சரவையில் கிராமிய வீதிகள் மற்றும் உள்கட்டுமான இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதுடன் அமைச்சின் கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளேன்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர் என்ற பொறுப்போடு மேலும் இந்த அமைச்சு பொறுப்பும் எனக்கு வழங்கப்பட்டுள்ளமையானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆதரித்து எமது கரங்களை பலப்படுத்தி நின்ற பல்லாயிரம் மக்களின் ஆணைக்கு வழங்கப்பட்ட கௌரவமாகவே நான் பார்க்கின்றேன்.

அந்தவகையில் எமது மக்களின் அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டினை இலக்காக கொண்டு நாம் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் நம்பிக்கை வைத்து என்னை பெருவாரியான ஆதரவுடன் நாடாளுமன்றம் அனுப்பிய உங்களுக்கு பணியாற்றுவதற்கு கிடைத்த வாய்ப்பாக இந்த அமைச்சுப் பொறுப்பினை கருதுகின்றேன்-என்றார். (அ)

# பல படுகொலைகளுக்கு அரசிடமிருந்து எந்தவிதமான நீதியும் கிடைக்கவில்லை

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஏப். 22

நாட்டில் நடைபெற்ற பல படுகொலைகளுக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான நீதியும் இதுவரை கிடைக்கவில்லையென மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படாத காரணத்தினால் முழு கிறிஸ்தவ மக்களும் கடும் கோபத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை முழுவதையும் உலுக்கிய உயிர்த்த ஞாயிறு படுகொலை நினைவு தினத்தினை முன்னிட்டு நேற்று நாடெங்கிலும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு நகரிலும் நேற்று விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக கட்டப்பட்டுள்ள நினைவுத்தூபியில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (அ)



# காருடன் மோதி தீப்பிடித்த பஸ்

*20 பேர் உடல் கருகி உயிரிழப்பு!*



அபுஜா, ஏப்.22
நைஜீரியாவில் காருடன் மினி பஸ் மோதி ஏற்பட்ட தீ விபத்தில் குழந்தைகள் உட்பட 20 பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
தெற்கு நைஜீரியா நெடுஞ்சாலையில் மினி பஸ் சென்று கொண்டு இருந்தது. இதில் 20-க்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். அப்போது எதிரே வந்த காரும் மினி பஸ்சும் எதிர்பாராத விதமாக பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் பஸ் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் பஸ்சில் இருந்த குழந்தைகள் உட்பட 20 பேர் கருகி உயிரிழந்தனர். சாரதி உட்பட சிலர் காயம் அடைந்தனர்.

# உலகின் தனிமையான வீடு: ரூ.35 கோடிக்கு விற்பனை!





வாஷிங்டன், ஏப்.22
அமெரிக்காவில் உள்ள மிகச் சிறிய தீவில் அமைந்துள்ள உலகின் ஒரே தனி வீடு இலங்கை மதிப்பில் 35 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.
சிறிய மற்றும் மக்கள் வசிக்காத டக் லெட்ஜஸ் தீவு அமெரிக்காவின் மைனே மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்த தீவில்இ 2009ல் 540 சதுர அடியில் சிறிய வீடு கட்டப்பட்டது. இதில் ஒரு படுக்கையறை மற்றும் ஒரு குளியலறை மட்டுமே உள்ளது.
இருப்பினும் அறையின் உட்புறம் மிகவும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
இந்த வீட்டில் தங்குபவர்கள் மற்றவர்களின் இடையூறு இல்லாமல் கடலின் அழகை முழுமையாக அனுபவிக்க முடியும்.
இது ஒரு வெறிச்சோடிய தீவில் இருப்பதால் இது உலகின் தனிமையான வீடு என்று அழைக்கப்படுகிறது. அந்த வீடு 35 கோடி ரூபாவுக்கு விற்கப்படும் என்றும் தெரிய வந்துள்ளது.

# 9 சிறுவர்களை பலிகொண்ட தீ: 150 உயிரினங்களும் இரையாகின!

இஸ்லாமாபாத் ஏப்.22
**பாகிஸ்தானில் குடிசைப்பகுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 9 சிறுவர்கள் பரிதாபமாக பலியாகினர்.**


பாகிஸ்தானின் சிந்து மாகாணம் தாது மாவட்டத்தில் பைஸ் முகமது என்கிற கிராமத்தில் உள்ள குடிசை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு திடீரென தீப்பிடித்தது. ஒரு குடிசை வீட்டின் சமயலறையில் ஏற்பட்ட தீ அடுத்தடுத்த குடிசைகளுக்கு பரவி கொழுந்து விட்டு எரிந்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் தீ மளமள வென பரவியதால் 50-க்கும் மேற்பட்ட குடிசைகள் முற்றிலுமாக எரிந்து சாம்பலாகின.
இந்த கோர விபத்தில் 9 சிறுவர்கள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.



மேலும், தீயின் கோரப்படியில் சிக்கி 150 எருமை மாடுகள், ஆடுகள் மற்றும் பிற கால்நடைகளும் தீயில் கருகி பரிதாபமாக இறந்தன.

# என்னை பிரதமராக்குங்கள் மெலன்சோன் வேண்டுகோள்

பாரிஸ்,ஏப்.22
"வேண்டுமானால் எனது கட்சிக்கு அமோக வாக்களித்து என்னைப் பிரதமராகத் தெரிவு செய்யுங்கள்" என்று மூத்த அரசியல் தலைவர் ஜோன் லூக் மெலன்சோன் பிரான்ஸ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முதற்சுற்றில் மரின் லூ பென்னுக்கு மிக நெருக்கமாக வாக்குகளைப்பெற்று பிரானஸின் மூன்றாவது அரசியல் சக்தியாகத் தன்னை அடையாளம் காட்டியவர் மெலன்சோன். இரண்டாவது சுற்றுக்கு முன்னேறுகின்ற வாய்ப்பு அவரை நெருங்கி வந்த போதிலும் நாட்டின் சோசலிஸ்ட்டுகள் மற் றும் கம்யூனிஸ்ட்டுகள் உட்பட இடதுசாரிகள் மத்தியில் காணப்படுகின்ற ஐக்கியமின் மையால் வெற்றி வாய்ப்பை இழந்தார்.
முதற்சுற்று முடிவு களுக்குப்பிறகு முதல் முறையாக தொலைக் காட்சி ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.
அதில் அவர் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நடை பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் எந்தத்தரப்புடனும் கூட்டணி அமைக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார்.
தனது கட்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம் அதிக உறுப்பினர்களை பாராளுமன்றம் அனுப்பிப் புதிய பிரதமராகத் தன்னைத் தெரிவு செய்யுமாறு ஆதரவாளர்களிடம் கேட்டுள்ளார்.

# ரஷ்யா ஏவுகணை சோதனை!

மாஸ்கோ, ஏப்.22
ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியிருப்பதாக தெரிவித்துள்ளது.
இந்த ஆயுதம் சாத்தான்-2 (சர்மாட்) என்று அழைக்கப்படுகிறது. ரஷ்யாவின் அடுத்த தலைமுறை ஏவுகணைகளில் ஒன்றாக உள்ளது. ஜனாதிபதி புட்டினின் வார்த்தைகளின்படி இது "வெல்லமுடியாத ஆயுதம்" என்று அழைக்கப்படுகிறது.
இந்த ஏவுகணை நாட்டின் அணுசக்தி படைகளின் போர் ஆற்றலை கணிசமாக அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளது.
இந்த நிலையில் உக்ரைன் போர் தொடர்பாக அமைதி பேச்சுவார்த்தை தொடர்பாக ரஷ்யாவின் கோரிக்கைகள் குறித்த வரைவு அறிக்கையை உக்ரைனிடம் அளித்துள்ளதாகவும் அவர்களின் பதிலை எதிர்பார்த்து காத்திருப்பதாக ரஷ்யா ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸில் கடும் நிலச்சரிவு:

# குளிர்சாதனப்பெட்டிக்குள் இருந்து உயிர் பிழைத்த சிறுவன்!



மணிலா ஏப்.22
பிலிப்பைன்ஸில் கடும் நிலச்சரிவால் 20 மணி நேரம் குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்து சிறுவன் உயிர் தப்பியுள்ளான்.
பிலிப்பைன்ஸின் நாட்டில் லேய்ட் மாகாணத்தில் மெகி என்ற பெயரில் வீசிய புயலால் கனமழையும் வெள்ளமும் நிலச்சரிவும் ஏற்பட்டது. இதனால் ஏராளமான வீடுகள் சாலைகள் கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. அப்போது பேபே நகரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டபோது அந்த பகுதியில் வசித்து வந்த சிஜே ஜஸ்மே என்ற 11 வயது சிறுவன் நிலச்சரிவு ஏற்பட்டபோது குளிர்சாதனப்பெட்டிக்குள் ஒளிந்து கொண்டான். பின்னர் அவன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளான்.
பிலிப்பைன்ஸ் நிலச்சரிவு காரணமாக இது வரை 172 பேர் உயிரிழந்துள்ளனர். 200 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# வெப்பத்தால் வாடும் விலங்குகளுக்கு ஐஸ்கிறீம்!

## புத்துணர்வூட்ட புதிய ஏற்பாடு

மெக்சிகோ ஏப்.22
மெக்சிகோவின் உயிரியல் பூங்காவில் வெப்பத்தால் வாடும் விலங்குகளுக்கு ஐஸ்கிறீம் வழங்கப்பட்டது.
அங்கு சுமார் 38 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகும் நிலையில் விலங்குகள் உயர் வெப்பநிலையை சமாளிக்க ஏதுவாக பூங்கா பணி யாளர்கள் ஒவ்வொரு விலங்களுக்கும் ஏற்றவாறு பிரத்யேகமாக ஐஸ்களை தயார் செய்தனர்.
சிறுத்தைப் புலிகளுக்கு மாமிசத்தால் ஆன ஐஸ்களையும், கறுப்பு ஹவ்லர் குரங்குகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஐஸ்களையும் வழங்கினர்.
மேலும் விலங்குகளின் இருப்பிடங்களுக்கு அருகில் குழிகள் தோண்டப்பட்டு, அதில் நீரை நிரப்பி விலங்குகள் குளியலாட ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ள நிலையில் விலங்குகள் அந்த நீர் குழிகளில் குளித்து மகிழ்கின்றன.



# டில்லியின் சுழலில் பஞ்சாப் படுதோல்வி!

மும்பை, பெப். 22

டில்லி அணியின் சுழலில் சிக்கி பஞ்சாப் கிங்ஸ் அணி தோல்வியைத் தழுவியது.

இந்தியாவில் நடக்கும் ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு 32ஆவது போட்டி நடந்தது. கொரோனா தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் டில்லி வீரர்கள் விளையாடியிருந்தனர்.

116 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்கை துரத்திய டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு பிரித்வி ஷா மற்றும் டேவிட் வோர்ணர் இணை சிறப்பான தொடக்கம் கொடுத்தது. இருவரும் முதல் ஐந்து ஓவர்களிலேயே 75 ஓட்டங்களை சேர்த்து அதிரடி காட்டினர்.

பவர்பிளே ஓவர்களை சிறப்பாக பயன்படுத்திய இருவரும் அடுத்தடுத்து பௌண்ட்ரிகளை விளாசி எளிதாக வெற்றி இலக்கை நெருங்கினர். இருவரையும் பிரிக்க பஞ்சாப்பின் வேகப் பந்துவீச்சாளர்கள் எவ்வளோ முயன்றும் முடியவில்லை.

7ஆவது ஓவரை வீசிய சுழற்பந்து வீச்சாளர் ராகுல் சஹாரே இவர்களின் இணைப்பாட்டத்தைப் பிரித்தார். 41 ஓட்டங்கள் சேர்த்திருந்த பிரித்வி ஷா எல்லீஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார். மறுபுறம் இருந்த டேவிட் வோர்ணர் ஐ. பி. எல்லில் தனது 53ஆவது அரைச் சதத்தையும் இந்தத்



தொடரில் தனது மூன்றாவது அரைச் சதத்தையும் எட்டி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். இதனால் ஒரு விக்கெட் மட்டுமே இழந்து 10.3 ஓவர்களிலேயே வெற்றி இலக்கை எட்டியது டில்லி கப்பிடல்ஸ் அணி.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சில் ராகுல் சஹார் மட்டுமே ஒரு விக்கெட் எடுத்தார். இதேநேரம் டில்லியின் துடுப்பாட்டத்தில் வோர்ணர் 60 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ரிஷப் பந்த் பந்துவீச்சைத் தெரிவு செய்தார்.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு ஷிகர் தவான் இந்தமுறை நிலைக்க தவறினார். 9 ஓட்டங்களில் லலித் யாதவ் சுழலில் சிக்கி அவர் வெளியேறினார். இதன்பின் வந்த ஜொனி பெயர்ஸ்ரோ 9 ஓட்டங்கள் மற்றும் லியோன் லிவிங்ஸ்ரன் 2 ஓட்டங்கள் என பஞ்சாப் கிங்ஸ் அணியின்முன்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க, டில்லி பந்துவீச்சாளர்களின் கை ஓங்கியது.

இந்த நிலைமையை அப்படியே தக்கவைத்தனர் டில்லி அணியின் சுழல் வீரர்களான குல்தீப் யாதவ், லலித் யாதவ் மற்றும் அக்சர் பட்டேல். இதனால், பஞ்சாப் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் எடுக்க திணறியதுடன் சீரான இடைவெளியில் தங்கள் விக்கெட்டையும் பறிகொடுத்தனர். விக்கெட் காப்பாளர் ஜிதேஷ் ஷர்மா மற்றும் அணித் தலைவர் மயங்க் அகர்வால் மட்டுமே ஓரளவு நிலைத்து ஆடினர். ஜிதேஷ் ஷர்மா அதிகபட்சமாக 32 ஓட்டங்களும் அவருக்கு அடுத்தபடியாக மயங்க் அகர்வால் 24 ஓட்டங்களும் எடுத்தனர். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் பஞ்சாப் கிங்ஸ் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 115 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது. (ஐ)



# கிரன் பொலார்ட் ஓய்வு

மும்பை, ஏப். 22

மேற்கிந்தியத் தீவுகளின் மிகச்சிறந்த சகலதுறை வீரரான கிரன் பொலார்ட் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானவர் கிரன் பொலார்ட். இவரை “கிரிக்கெட் உலகின் பொல்லாதவன்” என்றும் இவர் அழைக்கப்படுவர். அந்தளவுக்கு உக்கிரமான ஆட்டங்களை இவர் வெளிப்படுத்தியிருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 123 ஒரு நாள் போட்டிகளில் 113 இனிங்ஸ்களில் ஆடி 2706 ஓட்டங்களை பெற்றதுடன், 55 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

இருபது - 20 போட்டிகளில் 83 இனிங்ஸ்களில் 1569 ஓட்டங்களையும், 42 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

இதுதவிர உலக அளவில் நடைபெறும் லீக் உட்பட உள்நாட்டு கிரிக்கெட்டிலும் விளையாடிய அனுபவம் உள்ளவர். நடப்பு ஐ. பி. எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கின் பெரும் போர் பெருந்துடுப்பாட்ட பதிவுகள்!



















வடக்கின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவு; பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப்.22

காலி முகத்திடலில் போராட்ட களத்துக்கு சீருடையுடன்சென்று அதற்கு ஆதரவு தெரிவித்த பொலிஸ் அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குட்டிகல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிவந்த பொலிஸ் சார்ஜன்ட் டப்ளியூ. எம்.அமரதாஸ காலி முகத்திடல் ஆர்ப்பாட்ட களத்துக்கு சென்றிருந்தார்.

இது தொடர்பில், அவர் கடந்த 14 ஆம்திகதி பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

இதனையடுத்து, மறுநாள் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், தற்போது அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# இலங்கைக்குப் பயணிப்போருக்கு அவுஸ்திரேலியா பயண எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 22

அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்ந்து வரும் நிலையில் இலங்கை செல்லும் அவுஸ்திரேலிய சுற்றுலா பயணிகளுக்கு அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு சுற்றுலா செல்லும் போது அதிக அவதானத்துடன் செயற்படுமாறு அவுஸ்திரேலியா தமது நாட்டு பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகம் இதனை தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் முன்னெடுக்கப்படும் பொது மக்கள் ஆர்ப்பாட்டம், எரிபொருள் இன்மை மற்றும் மின்தடை என்பன தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இதற்கமைய வாகன போக்குவரத்து மற்றும் பொது போக்குவரத்தின்போது இன்னல்கள் ஏற்படக்கூடும் அவுஸ்திரேலியா தமது நாட்டு பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
22 - 06 - 1945

உதிர்வு
17 - 04 - 2022

## இராஜேஸ்வரி மகேஸ்வரன்

(BscHons(Chemistry)(Ceylon), PhD, Emeritus Professor in Chemistry, Former Head, Dept. of Chemistry and Former Rector (09.04.2003 to 10.04.2006), Vavuniya Campus, University of Jaffna)

யாழ். கரணவாயைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Maidenhead ஐ வதிவிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி மகேஸ்வரன் அவர்கள் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்) இராசம்மா தம்பதிகளின் செல்வ புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேராசிரியர் மகேஸ்வரன் (Dean Science Faculty- University of Jaffna) அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரன் (பிரித்தானியா), இராஜநாயகம் (பிரித்தானியா), இராஜகோபாலன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரன், சுதந்திரேஸ்வரன், இராஜேஸ்வரன், சிவனேசரட்ணம் குணரட்ணம் மற்றும் சிவனேசராணி பத்மனேசன் (கொக்குவில்), சிவனேசமலர் ஜெயபாலன் (கொக்குவில்), சிவனேசஜோதி சிவானந்தராஜா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**வீடு (குடும்பத்தினர்) - 00447860518621**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மக்களுக்கு நிவாரணங்களை உடனடியாக வழங்கவேண்டும்

## அரசிடம் மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 22

பொதுமக்களுக்கு அவசியமான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் உடனடியாக அவதானம் செலுத்தவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்கள் பசியின்றி வாழ்வதற்கு அவசியமான சூழலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அறிக்கை ஒன்றின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எரிவாயு, எரிபொருள் உட்பட நுகர்வுப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும், தட்டுப்பாடின்றி அந்தப் பொருட்களை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம், போராட்டங்கள் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசிடம் கூறியுள்ளது. (அ)

# அரவிந்தகுமார் பச்சை துரோகி!

## ஹற்றனில் கொடும்பாவி எரிப்பு



கொழும்பு, ஏப். 22

மக்களை வதைக்கும் அரசுக்கு எதிராகவும், அவ்வாறானதொரு அரசுக்கு ஆதரவு வழங்கி இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட அரவிந்தகுமாருக்கு எதிராகவும் ஹற்றனில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மக்களை காட்டிக்கொடுத்த துரோகி என விமர்சித்து, இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் உருவப்பொம்மையை போராட்டக்காரர்கள் நடுவீதியில் வைத்து தீயிட்டு கொளுத்தி, எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன், மக்கள் கோரிக்கையை ஏற்று பதவி விலக மறுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

ஹற்றன் ஸ்டிரதன் தோட்ட பகுதியைச் சேர்ந்த, பெருந்தோட்ட மக்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாது, போராட்டத்தில் இறங்கினர்.

ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் ஸ்டிரதன் பகுதியில் குவிந்த மக்கள், பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், காலி முகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், ஜனாதிபதியை பதவி விலகுமாறு வலியுறுத்தியும், இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட அரவிந்தகுமாருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷங்களை எழுப்பியவாறு, தமது உள்ளக் குமுறல்களையும் வெளிப்படுத்தினர்.

இப்போராட்டத்துக்கு முன்னர், அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ திருச்சொரூபத்திற்கு முன்பாக மக்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு மெழுகுவர்த்தி வைத்து அஞ்சலி செலுத்தினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் எனவும் பிரார்த்தித்தனர். (அ)

# 25ஆம் திகதி வரை எரிவாயு விநியோகம் நடைபெறமாட்டாது

கொழும்பு, ஏப். 22

பற்றாக்குறை காரணமாக எரிவாயு சிலிண்டர்களை ஏப்ரல் 25ஆம் திகதி வரை சந்தைக்கு விநியோகிக்க முடியாது என லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிவாயு சரக்கு கப்பல்கள் இன்னும் கரைக்கு வந்தடையாதமையால், விநியோக வலையமைப்பை சீராக்கவேண்டிய நெருக்கடியான சூழ்நிலையில் நிறுவனம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தங்களுக்கு எரிவாயு விநியோகச் சங்கிலியில் சிக்கல் உள்ளதாகவும் இருப்பினும் நாட்டில் தற்போது நிலவும் எரிவாயு பற்றாக்குறை ஓரிரு மாதங்களுக்குள் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

முன்னதாக, ஏப்ரல் 12 முதல் வணிக நோக்கங்களுக்காக லிட்ரோ எரிவாயு விநியோகம் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ரம்புக்கனையில் மரணமானவரின் வீட்டுக்குச் சென்ற ஜே.வி.பியினர்!

கொழும்பு, ஏப். 22

ரம்புக்கனையில் எரிபொருள் கோரி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சமிந்த லக்ஷானின் வீட்டுக்கு ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி நேற்று விஜயம் செய்தார்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக அண்மையில் ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது லக்ஷான் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஹந்துன்நெத்தி தமது அனுதாபங்களைத் தெரிவித்ததுடன், லக்ஷான் உயிரிழந்த இடத்தையும் பார்வையிட்டார். (அ)

## எதிரணிகள்...

இதில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, 43ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூன்றாம் ஆண்டு நினைவுதினமான நேற்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், புதிய ஆட்சியை அமைக்கும்போது பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கம் எட்டப்பட்டது.

எதிர்பார்ப்பின் இணக்கப்பாடு என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்தக் கோரிக்கையில், “ராஜபக்ஷ வாதத்துக்கு முடிவு கட்டுதல், 20ஆவது திருத்தத்தை இல்லாது ஒழித்தல், 19ஆவது திருத்தத்தை உரிய திருத்தங்களுடன் மீண்டும் நடைமுறைப்படுத்தல், ராஜபக்ஷ வாதத்துக்கு எதிரான கட்சிகள் ஒன்றிணைந்து இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல், சகல இனங்கள், மதங்கள், பாலினங்கள் சம உரிமைகள் கொண்ட இலங்கை சமுதாயத்தை அங்கீகரித்தல். பொருளாதார நெருக்கடிக்கு ஒன்றிணைந்த ஒப்பந்தங்கள் மூலம் துரித தீர்வு காணுதல், மருந்துகள் உரங்கள், உணவுப் பொருட்கள், எரிபொருட்கள், தொழில் மூலப் பொருட்கள் கிடைக்க வழிவகை செய்தல், வறுமைக் கோட்டின்கீழ் இருக்கும் மக்களை பாதுகாத்தல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொத்துக்கள், கடன்கள் என்பவற்றை அறியும் உரிமையை மக்களுக்கு வழங்குதல், பொது நிறுவனங்களின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் கணக்காய்வு செய்தல். மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல். சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல், மோசடி ஊழல் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டுக்களை விசாரித்து தண்டனை வழங்கல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாத சட்டத்தை ஒழித்தல், குடிமக்களின் கருத்துக்களை முன்வைக்கவும் பங்களிக்கவும் மக்கள் மன்றத்தை நிறுவுதல்”, என்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பிரதமர்...

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் அரசு அதற்கு வலுவாக முகம் கொடுக்கவேண்டுமெனவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அரசை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டுமெனவும் இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் யோசனை தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் யு.கே.சுமித்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக கைகளை உயர்த்தி ஏகமனதாக ஆதரவளித்தனர்.

அடுத்த சில வாரங்களில் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் விளக்கமளித்தனர்.

எரிபொருள் மற்றும் மின்வெட்டு பிரச்னையை ஒரு சில வாரங்களுக்குள் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிவாயு பிரச்னைக்கு இன்னும் சில வாரங்களில் தீர்வு காண முடியும் என கல்வி மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் அமைச்சர் பதவிகளை விலகி ஆதரவளித்தமைக்கு கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

புதிய அமைச்சர்கள் வலுவாக முன்னேறுவதற்கு தேவையான ஆதரவை வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அரசை சீர்குலைக்கும் பொய்ப் பரப்புரைகள் மூலம் அரசு மீதான மக்களின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் சில குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும், கட்சி உறுப்பினர்கள் என்ற வகையில் அரசை சீர்குலைக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அரசை பலப்படுத்துவதற்கு தேவையான ஆதரவு எதிர்காலத்தில் அதிகரிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சபைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, அரசின் முதன்மைக் கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், சபைத் தலைவர் ஹர்ஷ விஜேவர்தன, அரசின் முதன்மை கொறடாவான சமிந்த குலரத்ன, பிரதமர் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் ரத்நாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

## ஈஸ்டர் தாக்குதலில்...

கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினக் கொண்டாட்டத்தில் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது கொடூரமான குண்டுவெடிப்பு தாக்குதல் நடந்து இன்றுடன் (நேற்றுடன்) மூன்று ஆண்டுகள் நிறைவடைகிறது. அந்த நேரத்தில் அரசாங்கத்தின் அலட்சியத்திற்காக தங்கள் விலைமதிப்பற்ற உயிர்களை அப்பாவி கிறிஸ்தவ மக்கள் கொடுக்க வேண்டியிருந்தது.

எமது அரசாங்கம் பதவியேற்று ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் ஆகும் நிலையிலும் 269 பேரைக் கொன்று 400இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த ஈஸ்டர் குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சாதாரண விஷயமல்ல. பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சந்தேகநபர்களை நீதிமன்றம் குற்றவாளி என்று அறிவித்த பின்னரே அவர்களை தண்டிக்க முடியும். எனவே, இதுவரை கிடைக்கப்பெற்ற பல்வேறு சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு விரைவில் நீங்கள் அனைவரும் எதிர்பார்த்த நீதி கிடைக்கும். இதற்காக நான் மிகுந்த அர்ப்பணிப்புடன் இருக்கிறேன் என்பதை இன்று உறுதியளிக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## உயர்தர...

வித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை, ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த நிலையில் பாடசாலைகள் மூடப்படுவதால், ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2022 உயர்தரப் பரீட்சை பாடங்களும் திகதிகளுடன் தொடர்புடைய நேர அட்டவணையும் இதுவரை வெளியிடப்படவில்லை. நேர அட்டவணை பின்னர் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாடுமுழுவதும்...

நாட்டில் கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் கத்தோலிக்க தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்கள் மற்றும் குண்டு வெடிப்புகளில் சிக்கி 254 பேர் உயிரிழந்தனர். 400இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் நடைபெற்ற மூன்றாவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

பிரதான நிகழ்வு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு - கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் என்பவை இணைந்து கொழும்பு பேராயர் இல்லத்தால் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, அந்தப் பகுதியில் பலத்த பாதுகாப்பு முன்னெடுக்கப்பட்டது. ஆலயத்துக்குள் நுழைந்த அனைவரும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நினைவுகூரலில் வெளிநாட்டு பிரஜைகளை பிரதிநிதித்துவப்படுத்தி அந்த நாடுகளின் தூதுவர்கள் பங்கேற்றனர். அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா, பங்களாதேஷ், சுவிற்சர்லாந்து, போர்த்துக்கல், சீனா உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்களோடு வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பிரைன் உடைஹூவே ஆண்டகையும் பங்கேற்றிருந்தார்.

இதேபோன்று, மட்டக்களப்பில் தாக்குதல் இடம்பெற்ற சீயோன் ஆலயத்திலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. (இது தொடர்பான செய்தி 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் தேவாலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

நாட்டின் அனைத்து தேவாலயங்களிலும் பிரார்த்தனைகளை தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து மூன்று வருடங்கள் நடந்தும் நீதி கிடைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டி நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. (ஐ)

## ஆளும்...

தமது தீர்மானத்தை எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள அவர்கள், இடைக்கால அரசாங்கத்தை அமைத்து பிரதமர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், அமைச்சுப் பதவிகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய அவர்கள், புதிய அமைச்சரவை நியமனத்துக்கு தமது எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் சுயாதீனமாக செயற்படுவார்களானால் அரசாங்கம் தமது பெரும்பான்மையை இழக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

## ஈஸ்டர்...

கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந் தோனியார் தேவாலயத்தில் நேற்று நடை பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் மேடையில் நேர்மையாக உண்மையை கண்டறிந்து நீதியை நிலை நாட்டுவதாக முழக்கமிட்டு தேர்தலுக்கு சென்ற நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர், ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த வாக்குறுதிகளை அனைத்தையும் புறந்தள்ளி விட்டுச் செயற்பட்டு வருகிறார்.

உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்களின் கூக்குரல்கள் வாகனத்தை நோக்கி முழக்கமிடுகின்றன. இந்த தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் அதன் பிரதிபன்களை அனுபவிக்க நேரிடும் என முழுமையான நம்புகிறேன்-என்றார். (அ)

## துப்பாக்கிச்...

பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

போராட்டத்துக்கு முந்தைய நாள் இடம்பெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தலைமையிலான கூட்டத்தின்போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்யவேண்டாம் என்றே தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க போராட்டத்தின்போது எவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. போராட்டத்தின்போது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன என்பவரே உத்தரவிட்டுள்ளார்.

அவருக்கு அந்த உத்தரவை வழங்குமாறு கோரியது பொலிஸ்மா அதிபரோ அல்லது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களோ அல்லர். ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மூவரே கூறினர்-என்றார். (அ)

## முகக்கவசம்...

கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக நடவடிக்கைகளில் தவிர முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்படமாட்டாது என புதிய சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண கடந்த 18ஆம் திகதி அறிவித்தார்.

இருப்பினும், கொவிட்-19 தொற்று நோய் இன்னும் முடிவடையாத நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, உரிய தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், முன்பு போலவே அனைத்து வெளி சூழ்நிலைகளிலும் முகக்கவசம் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 1040 கோடி...

போதே இந்த உதவிகளை அறிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, சீன - இலங்கை உறவு குறித்து நினைவு கூரப்பட்டன. தொடர்ந்து நாட்டின் சமூக, பொருளாதார நிலை குறித்து பேசப்பட்டன.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து தூதுவருக்க பீரிஸ் விளக்கமளித்தார். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி மற்றும் கடன் சீரமைத்தல் விடயங்களை உடனடியாக சமாளிக்க அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து தூதுவருக்கு விளக்கமளித்தார்.

சீனா நேரடியாகவும் செஞ்சிலுவை சங்கம் மூலமும் ஆதரவுகளை இலங்கைக்கு தொடர்ந்தும் வழங்கும் என்று தூதுவர் கியூ சென்ஹொங் குறிப்பிட்டார்.

சீனாவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் இலங்கைக்கு 5000 மெற்றிக் தொன் அரிசியையும் (முன்னர் வழங்குவதாக உறுதியளித்த 2000 தொன் உள்ளடங்கலாக) உடனடியாக வழங்குவதாக உறுதியளித்தது. தவிர, 20 கோடி யுவான் பெறுமதியான - நம் நாட்டு மதிப்பில் சுமார் 1040 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களையும் வழங்க சீனா முன்வந்துள்ளது.

மேலும், சீனாவின் யுனான் மாகாணம் 15 இலட்சம் யுவான் - 7.8 கோடி இலங்கை ரூபாய் மதிப்பான உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்க உறுதியளித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## ஏழாலையில் கொள்ளை இரு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 22

ஏழாலையில் வீடொன்றை உடைத்து நுழைந்தவர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்களை யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற இந்த கொள்ளைச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வீட்டின் கதவை உடைத்து நுழைந்த இருவர், அங்கிருந்தவர்களை நித்திரையிலிருந்து எழுப்பி காயப்படுத்தியதுடன் அவர்களை அச்சுறுத்தி மூன்றரை பவுண் நகையை கொள்ளையடித்து தப்பித்தனர்.

இதில் காயமடைந்த பெண் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனடிப்படையில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், ஏழாலை குப்பிளானைச் சேர்ந்த 23 மற்றும் 33 வயது சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் கொள்ளையிட்ட நகைகளை சுன்னா கத்தில் அடகு வைத்த நிலையில் பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 - 03 - 1984



மறைவு 21 - 04 - 2022

### நித்தியானந்தம் ஜின்சன்

(அராலி கிழக்கு, அராலி)

நித்தியானந்தம் ஜின்சன் நேற்று ( 21.04.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினரும், அராலி, ஆவாரம்பிட்டி, முத்துமாரி அம்பாள் 7ஆம் திருவிழா உபயகார்களும் அதிர்ச்சியில் உறைந்து விட்டோம். அமரர், ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கால்பந்தாட்ட நடுகள வீரரும், கழக வீரர்களை ஒருங்கிணைத்து செயல்படும் ஒருங்கிணைப்பாளரும் போட்டிகளின் வெற்றி - தோல்விகளில் வீரர்களுக்கு அறிவுரை கூறும் ஜேம்ஸ் கழகத்தின் அதிசிறந்த முன்னுதாரண நன்னடத்தை வீரருமாவார்.

ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய 7ஆம் திருவிழாவை முன்னின்று சகஉபயகாரர்களுடன் சிறப்பாக வழிநடத்திய எமது பொக்கிஷத்தை இழந்து தவிக்கிறோம். அன்னாரின் இழப்பால் துய ருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன், அவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். அத்துடன், அன்னாரின் புனித ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

உன் வேலைத்தன்மை கண்டு நாம் மகிழ்ந்தோம்
வீரத்தன்மையாய் கண்களை தானமாக்கினாய் வீரா
உன் சிறுநீரகத்தையும் தானமாக்கினாய் வீரா
எம் சக வீரரே உன் பொன்னான தானங்களுடன்
- என்றும் நீ எம்முடன்

உன் பிரிவு துயரால் வாடும்:
**அராலி தெற்கு, கிழக்கு ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம்**
**அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய 7ஆம் திருவிழா உபயகாரர்கள்.**



# மக்களைக் கொன்று அரசியல் செய்யாதே!

## மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் நேற்று போராட்டம்

மன்னார், ஏப். 22

மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை காலை அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் சபையின் 48 ஆவது அமர்வு நேற்றுக் காலை மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபையின் 25 உறுப்பினர்களில் 21 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சபை உறுப்பினர்கள் சபையில் கறுப்புப் பட்டி அணிந்து அரசுக்கு எதிராக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சபை அமர்வில் கலந்துகொண்டனர்.



உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைவாக அவர்கள் அரசுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரத்தவெறி பிடித்தவனே நாட்டை விட்டு வெளியேறு, மக்களை பட்டினிச்சாவில் தள்ளாதே, மக்களை கொன்று அரசியல் செய்யாதே, விவசாயத்தில் கை வைத்து நாட்டை அழிக்காதே, சொந்த மக்களை சுட்டுத் தள்ளாதே உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். (அ)

## ஜனாதிபதி செயலகம் முன் கறுப்பு, வெள்ளை கொடிகள்

கொழும்பு, ஏப். 22

ஏப்ரல் 21 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு நேற்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின.

இதனை முன்னிட்டு காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருபவர்கள், ஜனாதிபதி செயலக வளாகத்தில் கறுப்பு, வெள்ளை கொடிகளைப் பறக்கவிட்டு தங்களது சோகத்தை வெளிப்படுத்தினர். (அ)





## அமெரிக்கத் தூதுவருடன் சந்திரிகா அவசர சந்திப்பு

கொழும்பு, ஏப். 22

நாட்டில் தற்போது நிலவும் அரசியற் குழப்பங்களுக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பில் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.